2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண்கள் 1 மற்றும் 2, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

3—

மண் பரிசோதனை நிலையம்

***9454—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் மண் பரிசோதனை நிலையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானாமதுரையில் மண் பரிசோதனை நிலையம் ஒன்று கட்டத் தற்போது அரசிடம் உத்தேசத் திட்டம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதி, விவசாயத்தை நம்பிய தொகுதி ஆகும். என்னுடைய தொகுதியில் நகர்ப்புறமே இல்லை. அதிகமான கிராமப்புற மக்கள்தான் வசித்து வருகிறார்கள். இந்தப் பகுதியில் அனைத்து மக்களும் விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்து வருகிறார்கள். அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் என்னுடைய தொகுதியில் கரும்பு, வாழை, நெல், பருத்தி போன்றவை பயிரிடப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில் எங்களுடைய மானாமதுரை பகுதிக்கு ஒரு மண் பரிசோதனை நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் என்னுடைய

பகுதியில் உள்ள அனைத்து விவசாயிகளும் அந்தப் பகுதியிலுள்ள விளை நிலங்களை, அந்த மண்களைப் பரிசோதனை செய்து, எந்த மண்ணில் எதைச் சாகுபடி செய்தால் அந்தப் பகுதிகளில் அதிகமான விளைச்சலைப் பெற முடியும் என்பதை அறிவார்கள். அதனால் என்னுடைய மானாமதுரை தொகுதியில் ஒரு மண் பரிசோதனை நிலையம் அமைத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்திலே மானாமதுரை இடம் பெறுகிறது. சிவகங்கையில் இப்பொழுது மண் பரிசோதனை நிலையம் செயல்பட்டு வருகிறது. மானாமதுரைக்கும், சிவகங்கைக்கும் இடையே 3.5 கிலோ மீட்டர் தொலைவுதான். இப்பொழுது அந்த மண் பரிசோதனை நிலையம் அங்கே செயல்பட்டு வரக்கூடிய காரணத்தினால், அதை மானாமதுரை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியம் முழுவதும் காவிரி ஆறு, நொய்யல் ஆற்றுப் பாசன விவசாயத்தை நம்பியுள்ளது. இப்பகுதியில், இந்த ஆற்றில் திருப்பூர் சாயக் கழிவு நீர் வந்து விவசாயத்தையே முழுமையாகப் பாழ்படுத்திவிட்டது. ஆகையால், கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் எத்தகைய விவசாயப் பயிர்களைப் பயிரிட முடியும் என்பதை அறிய மண் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு முன் வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9—35

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஏழை எளிய சுமார் 18,40,000 பம்புசெட் விவசாயிகளுக்கு

இலவச மின்சாரம் தந்து, ஏழை விவசாயிகள் வாங்கிய கடனைத் திரும்ப அடைக்க முடியாத நிலையிலிருந்தபோது, 6,866 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்து, விவசாயிகள் வாழ்வில் ஒளியேற்றிய தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் மண் பரிசோதனை நிலையம் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் இருந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது, மண் பரிசோதனை நிலையத்திற்கு எப்போது மண்ணை எடுத்துச் சென்றாலும் உடனடியாகப் பரிசோதனை செய்து தருகின்றார்கள். ஆனால், எல்லா விவசாயிகளும் விவசாயத்திற்கு முன்னால் அந்த மண்ணை எடுத்துக்கொண்டு போய்ப் பரிசோதனை செய்ய வேண்டுமென்ற ஒரு awareness அவர்களுக்கு இன்னும் உருவாகவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற மண் பரிசோதனை நிலையங்களிலும், ஒவ்வொரு பருவ காலத்திலும், சாகுபடி செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால், பத்திரிகைகள் மூலமாகவும், மற்ற நாளிதழ்கள் மூலமாகவும் விளம்பரங்களைச் செய்து, ஒவ்வொரு தாலுகா வாரியாக எடுத்து, அவர்களுடைய பெயரைக் குறித்து அந்தந்த இடங்களில் வைத்து, மண் பரிசோதனை செய்கின்ற அதிகாரிகளே ஒட்டுமொத்தமாக அவற்றையெல்லாம் பெற்று மண் பரிசோதனை செய்து, ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள் அவர்களுக்கு அந்த மண்ணில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன, என்ன சத்து குறைவாக இருக்கிறது, எவ்வாறு அந்த மண்ணை வளப்படுத்த வேண்டுமென்ற தகவலைத் தெரிவிக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தர இந்த அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 19 மாவட்டங்களில் மண் பரிசோதனை நிலையங்களும், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் தமிழகத்திலே செயல்பட்டு வருகின்றன. மண் பரிசோதனை, ஆய்வு, ஆலோசனை, முறையாக இப்போது வழங்கப்பட்டு வருகிறது. அதை இன்னும் வேகப்படுத்த வேண்டுமென்று இந்த அரசு தற்போது துறைக்கு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.